**இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை - 2021**

**………………………………………………….**

## 1. நிதிக்கூற்றுக்கள்

**……………………**

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

**………………………………………………**

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் தரும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**…………………………………………………………………**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாகப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினர்களின் பொறுப்பு

**……………………………………………………………………………………………………………………**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்நியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

**..........................................................................................................**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இரக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு சபையின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்னிக்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை

மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத் தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் சபையின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபையின் செயற்பட்டுள்ளதாக,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணஒங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இக் 51 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்களின் பயன்தகு ஆயுட்காலம் ஆகக் குறைந்தது ஒவ்வொரு நிதி ஆண்டும் மீளாய்வு செய்யப்பட வேண்டியதுடன் வினைத்திறனான ஆயுட்காலம் ஏற்கனவே மதிப்பீடு செய்யப்பட்டதனை விட மாற்றமடையுமாயின் இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 08 இன் பிரகாரம் கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் 2021 திசெம்பர் 31 அளவில் முழுமையாகப் பெறுமானத் தேய்வு செய்யப்பட தற்பொழுது பயன்படுத்தப்பட்டு வருகின்ற ரூபா 315,482,609 கிரயமான ஆதனம், பொறி, மற்றும் உபகரணங்களின் பயன்தகு ஆயுட் | அவதானிப்புக்களுடன் இணங்குகிறேன். தற்பொழுது பயன்படுத்தப்படுகின்ற முழுமையாகப் பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட சொத்துக்களை மீண்டும் மீள்மதிப்புச் செய்வதற்காக அதிக செலவு செய்ய வேண்டி ஏற்படும் அதிக செலவினை மேற்கொண்டு சொத்துக்களை மீள்மதிப்புச் செய்து அப்பெறுமதியை ஏடுகளுக்கு கொண்டு வருதலானது கொள்கை ரீதியாக சரியானதாக இருந்த போதிலும் அச் செலவுகளுக்கு நிகரான சேர்க்கப்பட்ட பெறுமதிகள் (Value addition) இல்லாததனால் பல அரசாங்க | நியமத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் சொத்துக்களை மீள்மதிப்பு செய்து அதற்கிணங்க கணக்குகளில் தேவையான செம்மையாக்கல்கள் செய்யப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதற்கிணங்க கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிறுவனங்களினால் இவ்வாறு சொத்துக்களை மீள்மதிப்புச் செய்தல் இடம்பெறவில்லை. | |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 05 செயற்திட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 31,699,372 பெறுமதியான நிர்மாணங்களுக்காக பொறியியல் பிரிவினால் உப கொடுப்பனவு சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தும் அப்பெறுமதிகள் நடைமுறை வேலைக் கணக்கிற்கும் கடன்கொடுத்தோர் கணக்கிற்கும் உள்ளடக்கப்படவில்லை. | அப்பெறுமதிகளானது பொறியியல் பிரிவினால் நிதிப்பிரிவிற்கு வழங்கிய அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்காததனால் அப்பெறுமதி நடைமுறை வேலையாகவும் ஒப்பந்தக்காரருக்கு மேற்கொள்ளப்பட வேண்டிய கொடுப்பனவாகவும் கணக்கீடு செய்யப்படவில்லை. | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | ரூபா 588,906 மற்றும் ரூபா 539,436 தேறிய பெறுமதியைக் காட்டியிருந்த இயந்திரங்கள் மற்றும் கணனி துணைக் கருவிகளுக்காக மீளாய்வாண்டிற்கான பெறுமானத் தேய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டிற்கான கணக்குகளில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | உரிய காலத்தில் சரியாக கணக்கு வைத்தல் வேண்டும். |
| (இ) | ரூபா 47,299,221 பெறுமதியான முற்கொடுப்பனவுகள் தீர்த்து வைக்கப்பட்டிருந்தும் அது அக்கணக்குகளிலிருந்து நீக்கப்படாது முன்கொண்டு வரப்பட்டுக் காணப்பட்டிருந்தன. | உரிய பதிவேடுகளைப் பரீட்சித்து காரணத்தை ஆராய்ந்து பார்த்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | உரிய காலத்தில் தீர்த:துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டிற்கான நிதி நிலைமைக் கூற்றில் கைத்தொழில் பேட்டைகளிலிருந்து பெறவேண்டியதாக ரூபா 20,042,645 மீதி காணப்பட்டதுடன் அந்த மீதி தொடர்பான பட்டோலையில் இனங்காணப்படாத ரூபா 3,891,207 தொகை மறை மீதியாக இருந்தது. அவ்வாறே மென்பொருலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கைத்தொழில் பேட்டைகளிலிருந்து கிடைக்க வேண்டியதாக பட்டோலையில் அது ரூபா 3,134,734 மறை | கலந்துரையாடி சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | காரணத்தை தேடிப்பார்த்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மீதியாக இருந்தது. இந்த மறை மீதிகளுக்கான காரணத்தை தேடிப்பார்த்து சரிசெய்து கணக்குகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |

**1.5.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் மென்பொருள் முறைமையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பரீட்சை மீதிகளின் பிரகாரமான மீதிகளையும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான மீதிகளையும் கணக்கிணக்கம் செய்த போது விற்பனைக் கிரயத்தில் நிருவாகச் செலவில், நடைமுறைச் சொத்துக்களில் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்களில் முறையே ரூபா 23,769,029, ரூபா 4,502,409, ரூபா 104,011,157 மற்றும் ரூபா 70,237,186 தொகைகளான வித்தியாசங்கள் காணப்பட்டன. அவற்றினை கணக்கிணக்கம் செய்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வேறுபாட்டிற்கான காரணம் பௌதீக இருப்பின் விளைவாகும். | பௌதீக இருப்பின் பெறுமதிகள் நாட்குறிப்பு ஒன்றின் மூலம் பதிவேடில் சீராக்கப்பட வேண்டும். பரீட்சை மீதி பெறப்பட வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 97,700,276 தொகையான முற்கொடுப்பனவு மீதிக்குள் ரூபா 11,819,515 தொகை 2015 ஆம் ஆண்டிற்கு முன்பிலிருந்தும் ரூபா 8,036,313 தொகை 2017- 2020 ஆண்டுகளுக்கிடைப்பட்ட 04 ஆண்டுகளாக முன்கொண்டு வரப்படும் மீதியாக இருந்ததுடன் இவற்றினை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை | இந்த மீதியை அறவீடு செய்வதற்கு ஒரு நடைமுறையினைத் தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றேன். | துரிதமாக தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | கைத்தொழில் பேட்டை பிரிவின் பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் கைத்தொழில் பேட்டைகளிலிருந்து கிடைக்க வேண்டிய வாடகை வருமானம் ரூபா 21,853,389 ஆக இருந்ததுடன் அறவீடு செய்வதற்கு முடியாத இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய ரூபா 12,498,476 மீதி அதற்குள் காணப்பட்டது.<br>அவ்வாறே நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கைத்தொழில் பேட்டை கடன்பட்டோரைத் தவிர்த்து வணிக மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகள் ரூபா 20,111,521 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் ரூபா 4,111,208 தொகை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பிலிருந்து முன்கொண்டுவரப்படும் மீதியாகும். | 2022 ஆம் ஆண்டின் இறுதியளவில் ஒட்டுமொத்த நிலுவைப் பணத்தை இதைவிட குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் மிகுதி கைத்தொழிலாளர்களுக்கு சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | -மேற்படி- |

**1.6. 2 செலுத்த வேண்டிய பணம்**

**...............................................**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்**<br>**……….........................................** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்**<br>**…………………..........……** | **சிபாரிசுகள்**<br>**……………….** |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வணிகக் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 86,431,770 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் ரூபா 23,380,208 தொகை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பிலிருந்து முன்கொண்டு வரப்படும் மீதியாகும். இவற்றினை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காரணங்களைத் தேடிப்பார்த்து செலுத்த வேண்டியவை பற்றி உறுதிப்படுத்தியதன் பின்னர் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | துரிதமாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| **(அ) அரசாங்க நிருவாக சுற்றறிக்கை** | | | |
| (i) 2018 பெப்ரவரி 20 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க சுற்றறிக்கை யின் 2(ii) ஆம் பந்தி | உரிய அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது 60 வயதினை மிகைத்த உத்தியோகத்தர் ஒருவர் சபையின் மனித வளங்கள் பணிப்பாளர் பதவிக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டு 2016 மே மாதத்திலிருந்து 2019 பெப்ரவரி மாதம் வரை ரூபா 2,989,008 தொகை சம்பளமும் படிகளுமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | பிரசித்திபெற்ற பத்திரிகைகளில் அறிவித்தல் வெளியிடப்பட்டு பொருத்தமான ஒருவரை தெரிவு செய்யமுடியாதன் அடிப்படையில் பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்தின் கீழ் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தார். இந்த நியமனம் சம்பந்தமாக 1994 இன் 19 ஆம் இலக்க ஊழல் அல்லது மோசடிக் குற்றங்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தின் கீழ் புலனாய்வுகள் இடம்பெற்று வருகின்றது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு மீறாது இருப்பதுடன் அதற்கு முரணாக நடவடிக்கை எடுக்காதிருத்தல் வேண்டும். |
| (ii) 2011 திசெம்பர் 12 ஆந் திகதிய 28/2011 ஆம் இலக்க சுற்றறிக்கை | 2012 சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து இலங்கை பொறியியலாளர் சேவையைச் சார்ந்த உத்தியோகத்தர்களுக்காக மாதாந்தம் ரூபா 15,000 படியினைச் செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் இச்சுற்றறிக்கையின் மூலம் படிகளைச் செலுத்துவதற்கு அங்கீகரிக்கப்படாத நிறுவனத்திற்காக படிகளைச் | பணிப்பாளர்கள் சபையின் சிபாரிசு அமைச்சின் செயலாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் அதற்காக அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டு அவர்களின் அங்கீகாரத்தின் பிரகாரம் உரிய படி | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களை மீறாதிருப்பதுடன் அதற்கு முரணாக நடவடிக்கை எடுக்காதிருத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செலுத்துவதாகயிருந்தால் அமைச்சு செயலாளரினூடாக நிதி அமைச்சிடமிருந்து அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் கைத்தொழில் அபிவிருத்திச் சபை அவ்வாறான அங்கீகாரமின்றி பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 12 உத்தியோகத்தர்களுக்கு 2018 ஆம் ஆண்டிலிருந்து பொறியியலாளர் படிகளைச் செலுத்தியிருந்தது. 2021 ஆம் ஆண்டிற்கான அக்கொடுப்பனவுகளின் மொத்தம் ரூபா 1,965,000 ஆகும். | சபையின் பொறியியலாளருக்குச் செலுத்தப்பட்டது. | |
| (ஆ) | 2013 ஆம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட சபையின் ஆட்சேர்ப்பு நடைமுறை | (i) அங்கீகரித்த ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிட்ட தகமைகளை அடைந்து கொள்ளாத ஒரு உத்தியோகத்தர் சந்தைப்படுத்தல் பணிப்பாளர் பதவிக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டு 2015 யூன் 26 ஆந் திகதியிலிருந்து 2021 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை ரூபா 10,882,253 தொகை சம்பளமும் படியுமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | பக்கசார்பற்ற மூன்று நபர்கள் குழுவின் மூலம் விசாரணைகள் நடாத்தப்பட்டு அறிக்கை தலைவருக்கு வழங்கப்பட்டதன் பின்னர் அது பணிப்பாளர்கள் சபைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அந்த அறிக்கை தொழில் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் இதுவரை பதில் வழங்கப்படவில்லை. | அங்கீகரித்த ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | | (ii) பிரதிப் பணிப்பாளர் (தொழில்முயற்சி அபிவிருத்தி) ஆக இருந்த ஒரு உத்தியோகத்தர் அங்கீகரித்த ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிட்ட தகமைகளை பூரணப்படுத்திருந்தும் பணிப்பாளர் (கைத்தொழில் பேட்டை) பதவிக்கு | அந்த நபர் சேவையிலிருந்து விலகியுள்ளார். அவரின் கொடுப்பனவு சம்பந்தமாக உருவாகிய சிக்கல் நிலையின் அடிப்படையில் மூன்று நபர் குழுவின்மூலம் விசாரணைகள் செய்யப்பட்டுள்ளன. அந்த விசாரணை அறிக்கையின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டிற்கு | அங்கீகரித்த ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 2013சனவரி 01 ஆந் திகதியிலிருந்து சேர்த்துக்கொள்ளப்பட் டிருந்தார். அத்திகதியிலிருந்து 2020 செப்தெம்பர் வரை இரண்டு பதவிகளின் சம்பளங்கள் மற்றும் படிகளுக்கிடையிலான வித்தியாசம் அண்ணளவாக ரூபா 3,977,595 ஆகும். | முன்பிலிருந்து பிரதிப் பணிப்பாளர் பதவியின் சம்பளத்திற்கும் பணிப்பாளர் பதவியின் சம்பளத்திற்குமிடையேெ யான வித்தியாசத்தை அறவீடு செய்ய வேண்டுமென சிபார்சு வழங்கப்பட்டிருந்தது. படிகள் செலுத்துவது சம்பந்தமாக உரிய அறிக்கை தொழில் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள் ளது. | |
| (இ) | இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மையி னால் (ICTA) வழங்கப்பட்ட இ-அரசாங்க கொள்கையின் 020102 ஆம் இலக்க உப பிரிவு | அனைத்து அரசாங்க நிறுவனங்களும் ரூபா 2 மில்லியனுக்கு மேற்பட்ட பிரதான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப செயற்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு முன்னர் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனத்தின் (ICTA) ஆலோசனையை பெற்றுக்கொள்ள வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தும் சபையினால் ரூபா 4.8 மில்லியன் செலவு செய்து கொள்வனவு செய்த Sage மென்பொருள் முறைமைக்காக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2020 சனவரி 27 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 1.2 ஆம் உப பிரிவு | ஒரு அரசாங்க நிறுவனத்தின் தலைவருக்கு ஒரு வாகனமும் ஒரு மாதத்திற்கு 150 லீற்றர் எரிபொருளும் (ஒரு ஆண்டிற்கு 1800 லலீற்றர்) பெற்றுக்கொள்ளலாம் என குறிப்பிடப்பட்டிருந்தும் 2021 ஆம் ஆண்டில் முன்னாள் தலைவருக்கு எதுவித அனுமதியுமின்றி மற்றும் சுற்றறிக்கைக்கு முரணாக வருடாந்தம் அவருக்கு தமைமையுள்ள எரிபொருள் அளவுக்கு மேலதிகமாக | பதில் வழங்கப்படவில்லை. | -மேற்படி- |

இன்னும் 2600 லீற்றர்களை மேலதிகமாகப் பெற்றிருந்தார்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 62,763,817 இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான இலாபம் ரூபா 14,022,747 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 48,741,070 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு முன்னைய ஆண்டினை விட மீளாய்வாண்டின் போது அரசாங்கத்தின் மீண்டுவரும் மானியம் ரூபா 84,500,000 ஆல் அதிகரித்தல் பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழிற்சாலைகளுக்கு உணவு ஆய்வுகூட பரீட்சிப்பு சேவைகளை வழங்குவதன் மூலம் தொழில்முயற்சிகளை மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்வதனைப் போல உணவு உற்பத்திகளின் தரத்தினை உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் உயர்த்துதல் முதலிய குறிக்கோள்களை முன்னிலைப்படுத்தி உணவு ஆய்வுகூடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது உணவு ஆய்வுகூட பிரிவின் அறிக்கைகளின் பிரகாரம் உள்ளபடியான வருமானம் ரூபா 6,056,249 ஆகும். எவ்வாறாயினும் உணவு ஆய்வுகூடத்தின் செயற்பாடுகளுக்காக 05 உத்தியோகத்தர்களைப் போல நிர்மாணிக்கப்பட்ட ஆய்வுகூட கட்டிடம் மற்றும் உபகரணங்கள் இந்த பரீட்சிப்பு நடவடிககைகளுக்காக | ISO 17025 சர்வதேச நியமங்களுக்கு இணங்க சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆய்வு கூட ஒப்புதலளித்தல் சான்றிதழினை வழங்குவதன் மூலம் உணவு உற்பத்திக்கான சேவையை வழங்குதலானது சர்வதேச ஆய்வுகூட சேவையை வழங்குவதற்காக SGS Lanka (Pvt)Ltd. நிறுவனத்துடன் இணைந்து ஆய்கூட சான்றிதழ் வழங்கப்படும். ஒப்புதலினைப் பெற்றுக்கொள்வதற்காக ISO 17025 இற்கு இணங்கிய வகையில் ஆய்வுகூடத்தில் 2020 ஆம் ஆண்டில் மாதிரிகளைப் பரீட்சித்தல் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் 2021/2022 Covid 19 சிக்கலின் காரணமாகவும் 2022 ஆம் ஆண்டின் போது நாட்டில் உருவாகிய பொருளாதார நிலைமையின் காரணமாகவும் ஆய்வுகூட நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்கு | நிறுவனத்திற்கான வருமானம் உச்ச அளவாகும் வகையில் உடன்படிக்கை செய்து கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஈடுபட்டிருந்தும் இந்த ஆய்வுகூடம் சுயமாக செயற்படாது ஏனைய வெளி நிறுவனத்துடன் தொடர்புபட்டு செயற்படுதல் இடம்பெற்றிருந்ததனால் உடன்படிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்பு வருமானத்தில் 80 சதவீதத்தினை வெளி நிறுவனத்திற்கு செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. அவ்வாறே ஆயவுகூடம் ஆரம்பிக்கப்பட்டு 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் ஆய்வுகூட பரீட்சிப்பு அறிக்கையினை வழங்குவதற்குரிய ஒப்புதலினை (Accrediation) பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | தடையாக அமைந்திருந்தது. ஒப்புதலைப் பெற்றுக்கொள்வதற்காக தற்பொழுது அனைத்து ஆய்வுகூடங்களும் தொழில்நுட்ப தேவைப்பாட்டினை பூரணப்படுத்தி ஒப்புதலுக்குத் தேவையான மதிப்பீடு பூரணப்படுத்தப்பட்டுள்ளது. | |
| (ஆ) | சபையின் 16 கைத்தொழில் பேட்டைகளில் 733 காணிப் பகுதிகள் காணப்பட்டதுடன் அவற்றில் 37 காணிப் பகுதிகள் கைத்தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படாமையால் பல ஆண்டுகளாக வெற்றிடமாகக் காணப்பட்டன. 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கைத்தொழில் பேட்டைகளில் 41 கைத்தொழில்கள் அமுல்ப்படுத்தப்படாது மூடப்பட்டிருந்ததுடன் அவற்றை ஏனைய கைத்தொழிலாளர்களை தேடிக்கண்டுபிடித்து பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 05 கைத்தொழில் பேட்டைகளின் 23 கணித்துண்டுகள் வசிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தன. | இக்காணிப் பகுதிகள் எதிர்காலத்தில் புதிய முதலீடுகளுக்கு ஒப்படைப்பதற்காக எங்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. உற்பத்தி நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிறுவனங்களுக்கு மத்தியில் ஆறு நிறுவனங்களை புதிய முதலீட்டாளர்களுக்கு ஒப்படைத்தல் இடம்பெற்றுள்ளது. | காணிப் பகுதிகளை கைத்தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கும் வினைத்திறனான கைத்தொழில்களை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | பன்னல கைத்தொழில் குடியேற்றத்தில் இலக்கம் 19 இலிருந்து இலக்கம் 24 வரையான 06 காணிப் பகுதிகள் (240 பேச்சஸ்கள்) | இலக்கம் 19 இலிருந்து 24 வரையான காணிப் பகுதிகளில் நிர்மாண நடவடிக்கைகளை முடிவுறுத்தி உற்பத்தி | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | 2016 ஆம் ஆண்டின் போது ஒரு கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அதன் நிர்மாண நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டு உற்பத்தி செயற்பாடுகள் 2022 யூலை 31 ஆந் திகதி வரையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. 17 ஆம் இலக்க காணியில் அமைந்துள்ள மெளுகுவர்த்தி உற்பத்தி நிறுவனத்தின் மூலம் முன்பக்க வீதியில் அனுமதியற்ற நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டிருந்தும் சபை அது சம்பந்தமாக எதுவித நடவடிக்கையையும் எடுக்கப்படாதிருந்ததுடன் பன்னல II ஆம் கட்டத்தின் 09 காணித் துண்டுகள் 2018 ஆம் ஆண்டின் போது கைத்தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தும் 2022 யூலை 30 ஆந் திகதி வரையும் உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவில்லை. | நடவடிக்கை ஆரம்பிக்கப்படாததனால் எதிர்காலத்தில் புதிய முதலீட்டாளர்களுக்கு ஒப்படைத்தல் அல்லது சபைக்கு ஒப்படைத்தல் இடம்பெறுதல் வேண்டும்.<br><br>இலக்கம் 17 இல் கொள்கலன் பெட்டி மூலம் மேற்கொள்ளப்பட்ட அனுமதியுள்ள நிர்மாணங்களை நீக்கிக்கொள்ளுமாறு குடியேற்ற நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர் மற்றும் குடியேற்ற பிரிவின் பணிப்பாளரினால் தெரியப்படுத்தப்பட்டது. கட்டம் 2 அபிவிருத்தி நடவடிக்கைகளை முடிவுறுத்தி 2021 ஆம் ஆண்டின் போது 08 கைத்தொழில்களுக்கு காணிப் பகுதிகளை ஒப்படைத்தல் இடம்பெற்றுள்ளன. 03 கைத்தொழில்களின் நிர்மாணங்கள் இடம்பெற்றுவருவதுடன் புதிய ஒரு கைத்தொழில் நிலத்தை துப்பரவு செய்து கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றது. | |
| (ஈ) | ஏக்கல் கைத்தொழில் பேட்டையில் ஊழியர்களுக்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள விடுதியில் எதுவித திருத்தங்களையும் மேற்கொள்ளப்படாமையின் காரணமாக மிகவும் உடைந்த நிலையில் காணப்பட்டது. அவ்வாறே 2021 ஆம் ஆண்டின் போது இரண்டு கைத்தொழிலாளர்களுக்கு கைத்தொழில் பேட்டையிலிருந்து வழங்கப்பட்டிருந்த DP-12 | உடைந்த நிலையில் காணப்பட்ட இந்த வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ள 40 பேச்சர்ஸ் அளவிலான தாழ் நிலங்களை ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்துவதற்காக பொருத்தமான முதலீட்டாளர்களுக்கு ஒப்படைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. DP-12 மற்றும் DP-13 காணிப் பகுதிகளில் தற்பொழுது இரண்டு நிறுவனங்கள் நிர்மாண நடவடிக்கைகளை | காணிப் பகுதிகளை கைத்தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கும் வினைத்திறனான கைத்தொழில்களை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மற்றும் DP-13 காணிப் பகுதிகளில் (103 பேச்சர்ஸ் அளவில்) 2022 யூலை 31 ஆந் திகதி வரையும் கைத்தொழில் ஆரம்பிப்பதற்காக எந்த ஆயத்தமும் இடம்பெற்றிருக்காமையின் காரணமாக காடு வளர்ந்து காணப்பட்டது. | ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது என எங்களுக்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. | |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) 2021 ஆம் ஆண்டில் உடைந்த அலுமினியம், இரும்பு, செம்பு, பித்தளை என்பவற்றை பெற்றுக்கொள்வதற்கான கைத்தொழிலாளர்கள் முறையே 157 ,108 ,131 மற்றும் 142 நபர்கள் பதிவு செய்திருந்தனர் சந்தைப்படுத்தல் பிரிவில் உடைந்த பொருட்களை விற்பனை செய்யும் பட்டோலையின் பிரகாரம் அலுமினியம் 13 நபர்களுக்கு இரும்பு 34 நபர்களுக்கு செம்பு 95 நபர்களுக்கு பித்தளை 136 நபர்களுக்கு வழங்கப்பட்டிருக்காததுடன் சிபார்சு செய்த அளவினை மிகைத்து அலுமினியம் 21 நபர்களுக்கும் இரும்பு 10 நபர்களுக்கும் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே ரூபா 42,056,412 பெறுமதியான 247 தாராபெச்கள் 11 கைத்தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 03 கைத்தொழில்ாளர்களுக்கு சிபார்சு செய்யப்பட்ட அளவினை விட அதிகமாக வழங்கப்பட்டிருந்தது. | உடைந்த அலுமினியத்தை வழங்கும் போது அலுமினியத்தின் அளவினை அடிப்படையாகக் கொண்டு கைத்தொழிலாளர்களுக்கு அலுமினியம் வழங்குதல் இடம்பெறும். உடைந்த பொருட்களை வழங்குகின்ற இடங்கள் மற்றும் உடைந்த பொருட்களைப் பெற்றுக்கொள்கையில் அவர்களின் வருடாந்த உடைந்த பொருள் தேவைப்பாட்டினைவிட குறைந்த அளவாக இருந்த போதிலும் போக்குவரத்துச் செலவுக்கு நிகரான உடைந்த பொருட்களை வழங்குதல் இடம்பெறுகின்றது. அவ்வாறே செய்யப்படாதுவிடின் அவர்கள் அதனை பெற்றுக்கொள்வதனை நிராகரிப்பார்கள். அதனால் பதுளை ஹாலி எல பிரதேசத்திலிருந்து வழங்கிய உடைந்த பொருட்கள் கொழும்பு பிரதேசத்திலிருந்து சென்ற கைத்தொழிலாளர்களின் வருடாந்த தேவைப்பாட்டினை மிகைத்திருந்தது. | மாவட்ட உத்தியோகத்தர்களால் சிபார்சு செய்யப்பட்ட உடைந்த பொருட்களின் அளவை பகிர்ந்தளித்தல் செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2021 ஒக்தோபரர் 18 ஆந் திகதி Medium Freguency Induction Furnace புதிய உலையினை பெறுமதி சேர் வரியின்றி ரூபா 22,996,722 பணத்திற்கு கொள்வனவு செய்வதற்கு வார்ப்பு பிரிவு நடவடிக்கை எடுத்திருந்தது. இந்த இயந்திரத்தினை பயன்படுத்தி ஒரு மாதத்திற்கு 60 மெட்ரிக் தொன்களை கொதிக்கவைக்கும் இயலுமை காணப்பட்டிருந்தும் பிரிவின் தொடக்க மட்டத்திலுள்ள உத்தியோகத்தர்களின் பறற்றாக்குறை மற்றும் இடவசதிகள் பற்றாக்குறையின் காரணமாக ஒரு மாதத்திற்கு 10 தொன்கள் அளவில் கொதிக்க வைக்கப்படுவதுடன் கிடைக்கும் சில கட்டளைகள் ஏனைய வெளி நிறுவனங்களுக்கு உப ஒப்பந்தம் வழங்கப்பட்டு நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 3 ஆவது சந்தர்ப்பத்தில் விலைமனுக்களின் கீழ் கோரும் போது 2 ஆவது சந்தர்ப்பத்தில் சமர்ப்பித்த சிறந்த மட்டத்திலுள்ள உலை மிகவும் உயர்ந்த விலையைக் காட்டியிருந்ததுடன் விலை மனுக்கள் கோரப்பட்டிருந்த மற்றைய உலையினதும் விலை இதைவிட உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருந்தது. | சிறந்த மட்டத்திலுள்ள உலையினை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சபை ஸ்தாபிக்கப்பட்டுள்ள 1.2953 ஹெக்டயர் அளவான காணி மற்றும் பிராந்திய அலுவலகம் அமைந்துள்ள 13 ஏக்கர் 03 ரூட் 34 பேச்சர்ஸ் அளவான காணிகளின் உரிமையை சபைக்குரியதாக்குவதற்கு முடியாதிருந்தது. இதன் காரணமாக இந்த ஆதனத்திற்கு அதிக அளவிலான வணிகப் பெறுமதி இருந்தும் பெறுமதியை கணித்து சபையின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு முடியாதிருந்தது. தலைமை அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள நிலத்தின் புதிய நிலக் கட்டிடம் அமைந்துள்ள காணியில் ¾ பகுதி அளயவானவை | பதில் வழங்கப்படவில்லை. | சபை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

தனியார் வியாபாரம் நடைபெற்று வருவதுடன் அவர்களிடமிருந்து எதுவித நில வாடகையோ அல்லது கட்டிட வாடகையோ அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது.

## 3.3 சச்சரவுத்தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| எம்பிலிபிடிய பல்நோக்கு மிளகு செயன்முறைப்படுத்தும் நிலையத்திற்கு இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களைத் திட்டமிடல், உருவாக்குதல், தயாரித்தல், வழங்குதல், ஸ்தாபித்தல் என்பவற்றிற்குத் தேவையான ஆலோசனை சேவைகளை வழங்குவதற்காக செயற்திட்டத்தின் மொத்த கிரயத்தின் 7 சதவீதமானது 07 கட்டங்களின் கீழ் சபைக்கு செலுத்துவதற்கு இணங்கி உரிய அமைச்சு மற்றும் கைத்தொழில் அபிவிருத்திச் சபை 2021 ஒக்தோபர் 15 ஆந் திகதி உடன்படிக்கை செய்துகொண்டிருந்தது. இதன் மூலம் சபைக்கு கிடைக்கின்ற மொத்த வருமானத்தில் 40 சதவீதமானது பொறியியல் பிரிவின் இச்சேவையினை வழங்குவதற்குப் பங்களிப்புச் செய்த உத்தியோகத்தர்களுக்கு இயலுமையினை ஊக்கப்படுத்துதல் படியாக (Capacity Motivation Allowance) செலுத்துவதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது. அதற்கிணங்க 21 உத்தியோகத்தர்னகளுக்கு ரூபா 2,933,333 தொகையான வருமானத்தில் ரூபா 1,079,467 தொகையான படியானது உரிய அமைச்சின் அல்லது நிதி அமைச்சின் அங்கீகாரமின்றி 2021 திசெம்பர் மாதம் செலுத்தப்பட்டிருந்தது. | பணிப்பாளர் பொறியியலாளரினால் பெயரிடப்படுகின்ற செயற்திட்ட மற்றும் தொடர்புள்ள உத்தியோகத்தர்களுக்கு அவர்களின் தேவைப்பாட்டின் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டின் போதும் ஆலோசனைக்காக கிடைக்கின்ற வருமானத்தில் 40% அளவானவற்றை செலுத்துவதற்கு பணிப்பாளர்கள் சபை அங்கீகாரம் வழங்கி சபைக்கு 60% ஆன பிரதிபலன்களும் அப்பணிப்பாக பங்களிப்புச் செய்தவர்களுக்கு விசேட வருமானமும் இதன் மூலம் கிடைக்கின்றது. அவ்வாறு இல்லாதுவிடின் சபைக்கு கிடைக்க வேண்டிய 60% அளவும் கிடைக்காது போகும். இவ்வாறான படியின் மூலம் சபையின் வருமானத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் அதன் மூலம் சபை குறிக்கோளுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கி ஊழியர்களின் பிரதிபலன்களை அடைந்து கொள்வதற்கு ஊக்குவிப்புச் செய்வோம். | கொடுப்பனவுக்காக திறைசேரி செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |

**3.4 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்**

.................................................................................................................................

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| ………................................................ | | ……………….........…… | …………….. |
| (அ) | பொறியியல் பிரிவின் வேலைத்தளத்தில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 10 ஆண்டுகளுக்கு மேல் பழைமையான பயன்படுத்த முடியாத 34 இயந்திரங்களும் ஏனைய உபகரணங்களும் காணப்பட்டிருந்தும் இப்பொருட்களை பிரிவிலிருந்து அகற்றுவதற்கு அல்லது ஏனைய பொருத்தமான முயற்சிகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே பெரிய துளைகளை சிறியதாக்குதல், சிறிய துளைகளை பெரியதாக்குதல்ககளை, உலோகத் துண்டுகளை வெட்டுதல் முதலிய வெளிச் செயற்பாடுகளுக்காக வேண்டுதல் காணப்பட்ட Boring Machine, Electrical Discharging Machine, Die Sinking Machine, Power Hammer for Black, Smithy Work ஆகிய 04 இயந்திரங்களில் இயக்குபவர்கள் இல்லாததன் அடிப்படையில் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பயன்படுத்தப்படபாது காணப்பட்டன. | பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத இயந்திரங்களை இனங்கண்டு விற்பனை செய்வதற்கும், திருத்தம் செய்து பயன்படுத்தக்கூடிய இயந்திரங்களை பொருத்தமான வகையில் திருத்தங்கள் செய்து பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. அதற்கிணங்க வேலை செய்யாதவைகள் இடத்தை பிடித்துக்கொண்டிருப்பதனைத் தவிர்த்துக் கொள்ளலாம். | பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத மட்டத்திலுள்ள பொருட்களை சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் கைதவிர்ப்பச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இறப்பார் சார்ந்த உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்தல், வீணாகுதலினைக் குறைத்தல், உற்பத்திச் செயற்பாடுகளின் வினைத்திறனை அதிகரித்தலும், உற்பத்திச் செலவினைக் குறைத்தலும், சிறிய மற்றும் மத்திய மட்டத்திலான கைத்தொழில்களுக்கு இந்த | திருத்தங்கள் செய்வதற்காக இரண்டு தடவைகள் உரிய சேவை வழங்குனர்களால் கண்காணிப்புச் செய்யப்பட்டிருந்தும் இன்னும் மென்பொருட்கள் சேதமடைந்துள்ளதனால் தயாரிப்பாளர்களின் தகவல்கள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. | நிறுவனத்தின் சொத்துக்களை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இயந்திரங்களை பயன்படுத்துவதனை அறிமுகப்படுத்தலும், ஊக்குவித்தலும் முதலிய குறிக்கோள்களை முன்னிலைப்படுத்தி 2016 ஆம் ஆண்டின் போது பேலியகொட இறப்பர் அபிவிருத்தி மற்றும் சேவை நிலையத்திற்கு இறப்பர் இன்ஜெக்சன் மோல்டிங் இயந்திரம் ரூபா 9,318,026 பணத்திற்கு (வரியுடன்) கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. கொள்வனவு செய்த திகதியிலிருந்து 328 பயிலுனர்களுக்கு மாத்திரம் பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்ததுடன் 2020 பெப்ரவரி 21 ஆந் திகதிக்குப் பின்னர் இயந்திரத்தினை செயற்படுத்த முடியாமையினால் செயற்பாடற்ற நிலையில் காணப்படுவதனால் அதனை 2021 ஒக்தோபர் மாதம் கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு கொண்டு வரப்பட்டிருந்தும் 2022 யூலை 30 ஆந் திகதி வரை அந்த இயந்திரம் செயற்பாடற்ற நிலையில் சபையின் பொறியியல் பிரிவின் வேலைத்தளத்தில் வைக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | பேலியகொட இறப்பர் பொருட்கள் அபிவிருத்தி மற்றும் சேவை நிலையத்தில் 64 இறப்பர் சார்ந்த இயந்திரங்கள் காணப்பட்டதுடன் அவற்றில் 26 இயந்திரங்கள் 1 ஆண்டிற்கும் 37 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக செயற்பாடற்றுக் காணப்பட்டன எனவும் ஒரு இயந்திரம் கொள்வனவு செய்த திகதியிலிருந்து பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை எனவும் வெளிப்படுத்தப்பட்டது. | இந்த இயந்திரம் இறப்பர் பிரிவு ஆரம்பிக்கப்பட்ட தொடக்க காலத்தில் கொண்டுவரப்பட்ட இயந்திரம் என்பதனால் உரிய காலத்தில் சந்தையிலிருந்து நீக்கப்பட்டுள்ளதுடன் அந்த இயந்திரத்தினை திருத்தம் செய்வதற்குத் தேவையான உதிரிப்பாகங்களையும் இறக்குமதி செய்வதற்கு முடியாமையின் காரணமாக திருத்தம் செய்தல் சிக்கலாக உள்ளதுடன் திருத்தம் செய்யக்கூடிய இயந்திரங்கள் அதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளன. | பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத அகற்றப்பட வேண்டிய பொருட்களை சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | உணவு ஆய்வு கூடத்தின் முதலாவது மாடியில் அமைந்துள்ள நுண் உயிரினங்கள் ஆய்வுகூடத்தினை நிர்மாணித்தல் முடிவடைகையில் ஸ்தாபிப்பதற்குப் பொருத்தமான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் திட்டமிடப்படவேண்டிய போதிலும் ரூபா 6,203,670 பெறுமதியான உபகரணங்கள் 2019 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இவற்றின் உத்தரவாத காலம் 2022 ஆம் ஆண்டின் இறுதியில் பயன்படுத்தப்படாது முடிவடைந்துள்ளதுடன் இவை 2022 யூலை 31 ஆந் திகதி வரை பரீட்சிப்பு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வழங்குனர்களுடன் கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் உத்தரவாத காலம் ஆரம்பிப்பதானது உபகரணம் ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர் என குறிப்பிடப்பட்டிருந்ததுடன் உபகரணம் ஆய்வு கூடத்தின் I ஆம் மாடியில் 2020/2021 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது COVID 19 சிக்கலின் காரணமாக 2022 ஆம் ஆண்டில் நாட்டில் காணப்பட்ட பொருளாதார நிலைமையின் காரணமாக தாமதம் ஏற்பட்டுள்ளதுடன் அந்த உபகரணத்தை இந்த ஆண்டின் போது பயன்படுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை வினைத்திறகான பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | අමප/16/1424/723/039 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் ரோபோ தொழில் நுட்பத்திற்கான விசேட நிலையத்தினை ஆரம்பிப்பதற்கும் தேவையான இயந்திரங்களை கொள்வவு செய்வதற்கு மற்றும் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் ஒரு கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்கும் ரூபா 40 மில்லியன் செலவு செய்யப்பட்டு ரூபா 80 மில்லியன் பெறுமதியான 04 ரோபோ இயந்திரங்கள், 02 சீஎன்சீ லேத் மற்றும் மில் இயந்திரங்கள் உள்ளடங்களாக அவை சார்ந்த உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு 02 சீஎன்சீ லேத் மற்றும் மில் இயந்திரங்களைத் தவிர்த்து ஏனைய உபகரணங்கள் 2018 மார்ச் மாதமளவில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. இதனை அமுல்ப்படுத்துவதற்காக | ரோபோ இயந்திரங்களை உள்ளடக்கி ஏனைய உபகரணங்களைச் செய்ற்படுத்துதல் வரிசை அமைச்சின் ஆலோசனை மற்றும் பணிப்புரையின் பிரகாரம் மேற்கொள்ளப்படும். | பொது இணக்கப்பாட்டின் அடிப்படையில் மீண்டும் செயற்திட்டத்தினை துரிதமாக ஆரம்பித்து சொத்துக்களை வினைத்திறனாகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

சேர்த்துக்கொள்ளப்பட்ட நிறைவேற்று உத்தியோகத்தருக்கு 2017 செப்தெம்பர் மாதத்திலிருந்து 2018 ஒக்தோபர் மாதம் வரை ஒரு மாதத்திற்கு ரூபா 725,000 வீதம் சம்பளமும் படியுமாகக ரூபா 11 மில்லியன் அளவில் செலுத்தப்பட்டிருந்ததும் தேவையான பதவியணியினரைச் சேர்த்துக்கொள்ளலும் அதன் நடவடிக்கைகளை ஆரம்பித்தலும் இடம்பெற்றிருக்கவில்லை. இது வெற்றியளிக்காமையின் அடிப்படையில் கைத்தொழில் அமைச்சின் கீழ் காணப்பட்ட இந்த நிலைத்தை 2018 திசெம்பரில் விஞ்டஞாபன மற்றும் தொழில்நுட்ப அமைச்சிற்கு ஒப்படைத்திருந்ததுடன் மீண்டும் 2020 ஆகஸ்ட் மாத்திலிருந்து கைத்தொழில் அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இலங்கையில் கைத்தொழிலுக்கு ஊக்கபடுத்தலினை வழங்குதல் அவற்றினை மேம்படுத்துதல், அபிவிருத்திக்கு உதவியளித்தல் ஆகிய குறிக்கோளுடன் இச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் இதுவரை நிறைவேற்றப்பட்டிருக்காததுடன் 2017 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆகஸ்ட் இறுதிவரை அதாவது 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இலங்கை கைத்தொழில் அபிவிருத்தியின் புதிய தள கட்டிடத்தில் இந்த உபகரணங்கள் விளைவற்றும் சில பொருட்கள் துருப்பிடித்தும் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 2017 ஆம் ஆண்டின் போது அசசுவேலி கைத்தொழில் பேட்டையின் உணவுச்சாலை மற்றும் தபால் அலுவலக கட்டிடங்களையும் கிணற்றினையும் நிர்மாணித்தல் ஆரம்பித்து 2018 யூலை 03 ஆந் திகதி ரூபா 1,911,200 உப கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இதில் உணவுச்சாலை மற்றும் தபால் அலுவலக கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தும் இதுவரை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாதிருந்ததுடன் கிணறு முறைப்படியாக பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இதற்கிணங்க ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்ட பணம் விளைவற்று இருந்ததுடன் கணக்காய்வுத் திகதி வரை முன்கொண்டு வரப்பட்டிருந்தது. | அதுவரை பூர்த்திசெய்யப்பட்ட வேலைப்பகுதிகளின் அளவுக்கு மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னரே இக்கொடுப்பனவு செய்யப்பட்டது. இந்நிர்மாணங்களில் கிணறு முறையாக முடிவுறுத்தப்பட்டிருக்காததுடன் ஏனைய அனைத்து நிர்மாணங்களும் அளவீட்டுப் பத்திரத்திற்கு இணங்க மேற்கொள்ளப்பட்டுள்ளன. கிணறு நிர்மாணிக்கப்பட்டிருந்தும் தொடர்ச்சியாக நீரைப் பெற்றுக்கொள்ளல் சிக்கலானது என்பதனால் இன்னும் இக்கிணற்றினை தோண்டுதல் வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த ஆழத்திற்கு செயற்பாடு முடிவுறுத்தப்பட்டிருக்காததனால் லேதிக கொடுப்பனவுகள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. | சொத்துக்களை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | அச்சுவேலி கைத்தொழில் பேட்டையின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 36,256,896 (ஏயுவு இல்லாது) பெறுமதியைக் பெகாண்ட ஒரு ஒப்பந்தம் 2018 ஆகஸ்ட் 30 ஆந் திகதி தேசிய இயந்திர உபகரண திணைக்களத்திற்கு வழங்கப்பட்டு அப்பெறுமதியில் 20 சதவீதமானது ரூபா 7,251,379 பணம் இரண்டு சந்தர்ப்பங்களின் போது அதாவது 2018 ஒக்தோபர் 05 ஆந் திகதி மற்றும் 2018 ஒக்தோபர் 23 ஆந் திகதிகளில் வழங்கப்பட்டிருந்தன. உடன்படிக்கையின் பிரகாரம் 2018 திசெம்பர் 01 ஆந் திகதி நிர்மாண நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தும் 2022 யூலை 30 ஆந் திகதி வரை முறைப்படியாக இந்த ஒப்பந்தத்தின் வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காததுட | இந்த ஒப்பந்தம் தொடர்பாக இந்த நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்யப்பட்டு 20 % ஆன முற்பணம் வழங்கப்பட்டிருந்தும் உடன்படிக்கை காலத்தினை மிகைத்தும் இச்செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்த நிர்மாணங்களின் செயல் முன்னேற்றம் காணப்படாததனால் அமைச்சு செயலாளரின் மூலம் இச்சிக்கலினை தீர்த்துவைப்பதற்கு உதவி செய்யுமாறு வேண்டிக்கொள்ளப்பட்டது. எதிர்காலத்தில் நிறுவன மட்டத்தில் கலந்துரையாடி இறுதி தீர்மானத்தினை எடுத்தல் வேண்டும். | நிர்மாணங்களை பூர்த்தி செய்வதற்கு அல்லது பணத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| | ன் நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்ட முற்பணத்தை மீண்டும் அறவிடுவதற்கு சபைக்கு முடியாதிருந்தமையின் காரணமாக இச்சலெவு விளைவற்றதாக மாறியிருந்தது. |

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சபையின் ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் வியாபார மேம்பாட்டு உத்தியோகத்தர் பதவியானது கனிஷ்ட முகாமைத்துவ மட்டத்திலுள்ள ஒரு பதவியாக இருந்த போதிலும் ஒரு வழக்கு தீர்ப்பினை அடிப்படையாகக் கொண்டு 52 உத்தியோகத்தர்களுக்கு வியாபார மேம்பாட்டு முகாமையாளர்களாக மத்திய முகாமைத்துவ மட்டம் வழங்கப்பட்டிருந்ததுடன் இந்த உத்தியோகத்தர்களை சபையின் அங்கீகரித்த பதவியணிக்குள் உள்ளடக்குவதற்கான அங்கீகாரம் இன்று வரை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | இந்த உத்தியோகத்தர்களை மத்திய முகாமைதுவ மட்டத்தில் அமர்த்துவதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு பல சந்தர்ப்பங்களில் வரிசை அமைச்சின் மூலம் கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | பதவியணியினை வழங்குவதற்கு முன்னர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஆ) | தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவின் பிரகாரம் நிரந்தர நியமனம் செய்யப்படும் வரை தற்காலிக ஏற்பாடாக மாத்திரம் பதில் கடமை நியமனம் செய்யப்பட வேண்டிய போதிலும் கணக்காய்விற்கு பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் சபையினால் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 05 | பணிப்பாளர் பதிவி வெற்றிடத்திற்காக ஆட்சேர்ப்பு நடவடிக்கை மேற்கொள்வதற்கு நிதி அமைச்சின் மூலம் தடை செய்யப்பட்டுள்ளது. மீண்டும் வாய்ப்பு கிடைத்த உடன் அந்த பதவி வெற்றிடத்தினை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கிறேன்.<br>உதவி பணிப்பாளர் பதவி வெற்றிடத்திற்காக உள்ளகரீதியாக நிரப்புவதற்கு | வெற்றிடத்தினை நிரப்புதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பணிப்பாளர்களையும் 21 உதவிப் பணிப்பாளர்களையும் உள்ளடக்கி 34 உத்தியோகத்தர்கள் பதில் கடமையாற்றுவதற்கு நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்களில் 10 உத்தியோகத்தர்கள் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் பதில் கடமையாற்றி வருகின்றனர். இந்த உத்தியோகத்தர்களுக்கு 2021 சனவரியிலிருந்து திசெம்பர் 31 வரையான பதில் கடமை படியாக ரூபா 2,264,189 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | முடியாதிருந்தமையானது வியாபார மேம்பாட்டு முகாமையாளர்களின் சங்கத்தினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கின் காரணத்தினாலாகும். | |
| (இ) | 2020 பெப்ரவரி 21 ஆந் திகதிய நிதி பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் 01/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அதன் கீழ் வருகின்ற அனைத்து நிறுவனங்களிலும் தொடக்க சேவை தரத்தில் (PL-1, PL-2 மற்றும் PL-03 ) தற்பொழுது காணப்படுகின்ற அனைத்து வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்புக்களை மீண்டும் அறிவிக்கும் வரை நிறுத்திவைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் நிறுவனத்தினால் ஒப்பந்த அடிப்படையில் தொடக்க சேவை தரத்தில் 34 நபர்கள் அதாவது (PL-1) 29 நபர்களும் (PL-3) 5 நபர்களும் மீளாய்வாண்டின் போது சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர | அப்போது ஒப்பந்த அடிப்படையில் மனித வளங்கள் ஆலோசகராக செயற்பட்ட உத்தியோகத்தரின் சிபார்சின் அடிப்படையில் அப்போது இருந்த தலைவரினால் மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்பு என கோவைளயீன் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2021 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய நிதி அமைச்சின் அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் 2 (ii) ஆம் பந்தியின் பிரகாரம் | இந்நியமங்களானது மனிதவளங்கள் முகாமைத்துவ ஆலோசகர் மற்றும் தலைவரினால் மேற்கொள்ளப்பட்டது. | சுற்றிக்கை அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஊழியர்களைச் சேர்த்துக்கொள்வதற்காக ஆரம்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தும் இதுவரை நியமனம் வழங்கப்படாத பதவிக்கான ஆட்சேர்ப்புக்கள் பிற்போடப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அதற்கு முரணாக நிதி பணிப்பாளரினைத் தவிர்த்து நிறுவனத்திற்கு 19 உத்தியோகத்தர்கள் 2021 செப்தெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர் | | |
| (உ) | நிறுவனத்தின் அங்கீகரித்த பதவியணியின் பிரகாரம் ஒரு இயந்திர பொறியியலாளர் பதவி மாத்திரம் காணப்பட்டதுடன் அது பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு காணப்பட்டிருந்தும் 2021/ BM 533/BP/3103 ஆம் இலக்க பணிப்பாளர் சபை தீர்மானம் மற்றும் தலைவரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ஒப்பந்த அடிப்படையில் இன்னும் இரண்டு இயந்திர பொறியியலாளர்கள் முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அங்கீகாரமின்றி 2021 ஆம் ஆண்டில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர். இவ்வாறு சேர்த்துக்கொள்ளப்பட்ட இந்த உத்தியோகத்தர்களுக்கு தலைவரின் அங்கீகாரத்துடன் அங்கீகரித்த சம்பளத் தொகுதிக்கு புறம்பாக ஒரு மாத்திற்கு ரூபா 75,000 வீதம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | பொறியியல் பிரிவின் நாளாந்த கடமைகளை மேற்கொள்வதற்காக தலைவரின் அங்கீகாரத்தின் பேரில் இப்பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர். அவர் பொறியியலாளர் பதவிக்குரிய அனைத்து தகமைகளையும் பெற்றிருந்த உத்தியோகத்தராவதுடன் சபையின் நாளாந்த கடமைகளை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்காக வைத்திருக்கும் குறிக்கோளில் இப்படிகளை வழங்குவதற்கு தலைவர் அங்கீகாரத்தினை வழங்கியிருந்தார். | பதவியை வழங்குவதற்கு முன்னர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள வேண்டியதுடன் அங்கீகரித்த பதவியணிக்குள் மாத்திரம் ஆட்சேர்ப்பு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | பேலியகொடையில் அமைந்துள்ள மின்பூச்சுமான நிலையத்தின் நிலையப் பொறுப்பாளர் என்ற பதவி அங்கீகரித்த பதவியணியில் இல்லாதிருந்தும் தலைவரின் அங்கீகாரத்துடன் அப்பதவிக்கு ஒரு உத்தியோகத்தர் 2021 யூலை மாதத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டு அங்கீகரித்த சம்பளத் தொகுதிக்கு புறம்பாக ஒரு மாத்திற்கு ரூபா 62,350 வீதம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | அந்த நிலையத்தின் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர் இல்லாததன் காரணமாக அதன் வேலைகளை மேற்கொள்வதற்கும் சேவைகளை மேற்கொள்வதற்கும் பதவியணியில் ஒரு உதவி பணிப்பாளர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டதனால் ஒப்பந்த அடிப்படையில் ஒரு பொறியியலாளர் சேர்த்துக்கொள்ளப்பட்டு MM 1-2 சம்பளத் தொகுதிக்கு இணங்க கொடுப்பனவினை மேற்கொள்வதற்கு தலைவர் தீர்மானித்திருந்தார். | பதவியினை வழங்குவதற்கு முன்னர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டியதுடன் அங்கீகரித்த பதவியணிக்குள் மாத்திரம் ஆட்சேர்ப்புக்கள் செய்யப்படுதல் வேண்டும். |
| (எ) | 2021 மார்ச் 31 ஆந் திகதிய 2021/BM/534/BP/3142 ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்திரத்தின் கீழ் அங்கீகரித்த பதவியனிக்குள் இல்லாத ஒரு பதவியான மனித வளங்கள் முகாமையாளருக்கான ஒரு ஆலோசகர் 06 மாத கடமை ஒப்படைப்பு அடிப்படையில் 2021 ஏப்ரல் 07 ஆந் திகதி சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர் . அதற்காக ரூபா 110,000 வீதம் சம்பளமும் படியுமாக மொத்தமாக ரூபா 550,000 செலுத்தப்பட்டிருந்தது. | அப்போதிருந்த தலைவரால் ''சபையின்'' மனிதவளங்கள் முகாமைத்துவங்களை செய்வதன் மூலம் ஊழியர்களின் விருப்பினை அதிகரித்தல்'' என்ற தலைப்பின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் நியமிக்கப்பட்டது. அந்த நியமனத்திற்காக செலுத்த வேண்டிய சம்பளமும் படியும் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்டது. | பதவியனியினை வழங்குவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள வேண்டியதுடன் அங்கீகரித்த பதவியணிக்குள் மாத்திரம் ஆட்சேர்ப்பு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஏ) | அங்கீகரித்த பதவியணியின் பிரகாரம் தேல்பொருள் பிரிவிற்கு 08 பயிற்சி ஆலோசகர்கள் இருக்க வேண்டிய போதிலும் தற்பொழுது இரண்டு பதில் கடமை ஆலோசகரினாலேயே பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2021 ஆம் ஆண்டின் போது இப்பிரிவிற்கு மூன்று புதிய பயிற்சி ஆலோசகர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தும் | பகிரங்க பத்திரிகை அறிவுறுத்தலின் மூலம் மற்றும் உள்ளக ரீதியாக தோல் பொருள் அபிவிருத்தி நிலையத்திற்கு ஆலோசகர்களை சேர்த்துக்கொள்வதற்கு பெற்றுக்கொள்ளப்பட்ட 45 விண்ணப்பங்களுக்காக இன்று வரை நேர்முகப் பரீட்சையை நடாத்தி ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படவில்லை. மனிதவளங்கள் ஆலோசகரினால் வெளிநபர்கள் | அங்கீகரித்த ஆட்சேர்ப்பு நடைமுறையின் தகமைகளின் பிரகாரம் ஆடசெேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| அவர்களுக்கு தோல் பொருள் வழங்கல் தொடர்பான பயிற்சி இல்லாத உத்தியோகத்தர்களாவார் கள். எனவே வேர்கள் மூவரும் ஏனைய பரிவுகளின் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். | நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. | |

4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

......................................................

4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

.................................................................

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ……….......................................... | ……………….......…… | …………….. |
| (அ) புதிய தூண்டுதல் மின்சார உலையினை பெற்றுக்கொள்வதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட செயற்திட்ட அறிக்கைக்கு இணங்க பல தசாப்தங்களாக வார்ப்பு பிரிவினால் வடிவமைப்பினை அடையாளமிடல் (Pattern Marking) வார்ப்படம் செய்தல் (moulding) உருக்குதல் (melting) பரிசோதனை செய்தல் (testing) ஆகிய 4 துறைகளினூடாக தொழில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கு போதியளவு பதவியினர் இல்லாததன் அடிப்படையில் 2021 ஆம் ஆண்டில் வார்ப்பு பிரிவினால் ஒரு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. | பயிற்சி நிகழ்சிசத்திட்டங்களை நடாத்துதல் ஜயிகா செயற்திட்டத்திற்குரிய கால எல்லைக்குள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன் அது 1996 இலிருந்து 2000 ஆண்டு வரையும் பின்தொடர் நடவடிக்கை காலப்பகுதியான 2000 ஆம் ஆண்டிலிருந்து 2002 ஆம் ஆண்டு வரையும் நடைபெற்றன. காணப்பட்ட குறிக்கோள்கள் மாற்றமடைதலும் நாளுக்கு நாள் தொழில்நுட்பம் முன்னேற்றமடைந்திருந்தும் நவீன பயிற்றுவிப்புக்கள் இல்லாமையால் தொழில்நுட்பத்தை நாளதுவரையாக்காமையும் மற்றும் நாட்டில் காணப்பட்ட தொற்றுநோய் நிலைமையால் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மட்டுப்படுத்தப்பட்டன. | இலக்குகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) சிறிய மற்றும் மத்திய அளவிலான கைத்தொழில்கள் உற்பத்திசெய்கின்ற பொருட்களை சந்தைப்படுத்தும் நடைமுறை தொடர்பாக நடவடிக்கை எடுத்தல், | தற்பொழுது இருக்கின்ற பதில் கடமையாற்றும் இரண்டு உதவிப் பணிப்பாளர்களில் ஒரு நபர் உடைந்த பொருட்களை கொள்வனவு செய்யும் | இலக்குகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சேவைகளை மேம்படுத்துதல், எதிர்கால சந்தைகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வதற்கு உதவியளித்தல் ஆகிய குறிக்கோளுடன் சந்தைப்படுத்தல் பிரிவு தோற்றுவிக்கப்பட்டிருந்தும் செயல்முன்னேற்றத்தை பரீட்சித்த போது 07 நடவடிக்கைகளில் 02 நடவடிக்கைகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தன. பிரிவினைத் தோற்றுவிக்கும் ஏனைய குறிக்கோள்களை வினைத்திறனாக நிறைவேற்றுவது தொடர்பாக சந்தைப்படுத்தல் பிரிவு கவனம் செலுத்தியிருக்கவில்லை. | செயற்றாபட்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளார். மற்றைய உத்தியோகத்தர் உடைந்த பொருட்களை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளார். உடைந்த பொருட்களை முகாமைத்துவம் செய்யும் செயற்திட்டத்தில் அதிக அளவிலான வேலைகள் செய்ய வேண்டியுள்ளதனால் ஏனைய செயற்பாடுகளுக்கு தற்பொழுது உத்தியோகத்தர்களின் காலத்தை ஈடுபடுத்த முடியாதுள்ளது. | |
| (இ) | சபையின் ஏனைய பிரிவுகளுக்குத் தேவையான தொழில்நுட்ப உதவியினை வழங்குதலும் கிராமிய மக்களின் தேவைப்பாட்டிற்குத் தேவைப்படும் தொழில்நுட்பத்தை வழங்குதலும், கைத்தொழிலுக்கான தர அறிக்கைகளையும் மதிப்பீட்டு அறிகைகளையும் தயாரித்தலும், உள்நாட்டு உலோக கைத்தொழிலுக்கான வார்ப்பு வசதிகளை அபிவிருத்திசெய்தல் ஆகிய குறிக்கோளில் பொறியியல் பிரிவு தோற்றுவிக்கப்பட்டிருந்தன. இப்பிரிவின் செல் நடவடிக்கைத் திட்டத்தில் 3 பிரதான செயற்பாடுகளின் கீழ் 21 உப செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்டிருந்தன. 3 உப செயற்பாடுகளின் செயல்முன்னேற்றம் 01 சதவீத்திலிருந்து 25 சதவீதம் வரையான வீச்சிலும் 11 உப செயற்பாடுகளினட செய்ல் முன்னேற்றம் 0 சதவீதத்திலுமாக திருப்தியற்ற மட்டத்தில் காணப்பட்டது. | நாட்டில் காணப்பட்ட பாதகமான பொருளாதார சூழ்நிலை மற்றும் கொரோனா தொற்றுநோய் நிலைமையின் காரணமாக கிடைத்த வேலை கட்டளைகளின் அளவு குறைவடைந்துள்ளதுடன் அக்காலதத்தில் ஊழியர் வருகையும் குறைவடைந்திருந்ததனால் செய்யப்பட்ட வேலைகளின் அளவு மட்டுப்படுத்தப்பட்டது. உள்ளயக வேலைக் கட்டளைகளின் செயல் முன்னேற்றமானது யெல்முன்னேற்ற அறிக்கையில் உள்ளடக்கப்படவில்லை. | இலக்குகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | புதிய கைத்தொழில் கொள்கையை உருவாக்கி கட்டியெழுப்பப்படும் கட்டிடத்திலிருந்து அதனை நடைமுறைப்படுத்தும் வரை கைத்தொழிலாளர்களுக்கு அதற்குத் தேவையான தெலாழில்நுட்ப ரீதியான உதவிகளை வழங்குதலும் தற்பொழுது காணப்படுகின்ற கைத்தொழில்களை விரிவுபடுத்துதல், நவீனமயப்படுத்துதல், பல்வகைப்படுத்துதல் அவற்றின் தரத்தினையும் வினைத்திறனையும் மேம்படுத்தலினை முன்னிட்டு அரவரகளுக்கு மேலும் தொழில்நுட்ப உதவியை வழங்கும் குறிக்கோளில் தொழில்நுட்ப பிரிவு தோற்றுவிக்கப்பட்டது. தொழில்நுட்ப பிரிவின் செயல்முன்னேற்ற அறிக்கைக்கு இணங்க 4 பிரதான செயற்பாடுகளின் கீழ் 11 உப செயற்பாடுகளின் மூலம் நடவடிக்கைகள் காட்டப்பட்டிருந்ததுடன் 6 உப செயற்பாடுகள் தொடர்பாக இலக்குகள் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. எதிர்பார்த்த இலக்குகளில் 50 சதவீதத்திற்கும் குறைந்த செயல் முன்னேற்றம் அடைந்து கொள்ளப்பட்டிருந்த உப செயற்பாடுகள் 2 ஆக இருந்தது. | கொவிட் தொற்றுநோய் நிலைமை, தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் காணப்படுகின்ற உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை என்பன சில செயற்பாடுகளின் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு தடையாக இருந்தன. | -மேற்படி- |
| (உ) | 18 கைத்தொழில் பேட்டைகளில் நீண்டகால குத்தகை அடிப்படையின் கீழ் கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு தேவையான உட்ககட்டமைப்பு வசதிகளுடன் பொருத்தமான காணிகளையும் கட்டிடங்களையும் வழங்குதல் மற்றும் காணியில் கைத்தொழில்களை | பதில் வழங்கப்படவில்லை. | இலக்குகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

ஆரம்பிப்பதற்கு தனியார் துறையை ஊக்குவித்து நேரடியான மற்றும் மறைமுகமான தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல் ஆகிய குறிக்கோளில் கைத்தொழில் பேட்டை பிரிவு தேற்றுவிக்கப்பட்டது. அதன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது 04 செயற்பாடுகள் நிறைவேற்றபடாதிருந்தும் ரூபா 73.8 மில்லியன் வருமானம் எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியாக ரூபா 46.5 மில்லியன் வருமானமே பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது. அதாவது 63 சதவீத வருமானமாகும். குத்தகை வருமானத்தை முறைப்படியாக அறவீடு செய்வதற்கு முடியாமையானது வருமானம் வீழ்ச்சியடைவதற்கு காரணமாக இருந்தது.